பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 05 புதன்கிழமை 20.11.2024 கதிர் 013

## இது ரகசியம் அல்ல!

தேர்தல் தோல்வியை அடுத்து ரெலோவிற்குள் பெரும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுவிட்டன. கட்சியின் பொதுச் செயலாளர் மட்டக்களப்பில் ☞ 2

## திக்கம் வடிசாலையைக் கைமாற்ற ரூ. 10 கோடி லஞ்சம் பெறப்பட்டது?

### பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் முன்னாள் அமைச்சர் மீது குற்றச்சாட்டு

பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான திக்கம் வடிசாலையை தென்னிலங்கை மது உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்குக் கையளித்தமைக்காக முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு 100 மில்லியன் (10 கோடி) ரூபாய் கைமாற்றப்பட்டுள்ளது (இலஞ்சம்) வழங்கப்பட்டுள்ளது என்று சபையின் புதிய தலைவர் சகாதேவன் குற்றஞ்சாட்டியுள்ளார். கடந்த 1-0 வருடங்களாகவே முன்னாள் அமைச்சர் ஒருவரால் இத்தகைய சூறையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மது வரித் திணைக்கள அதிகாரிகள் 15 மில்லியன் (1.5 கோடி) ரூபாய் இலஞ்சம் வாங்கியதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் இந்த இலஞ்ச மோசடிகள் குறித்து விரிவான விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ள, யாரும் தப்ப முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று வருகை தந்த அவர், நகரில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் பனை உற்பத்தி பொருட்கள் விற்பனை நிலையத்தை பார்வையிட்டார். அதன் பின்னர் ☞ 7

## 18 அமைச்சுக்களுக்கு செயலர்கள் நியமனம்



புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டு நிலையில் அமைச்சுக் களுக்கான செயலாளர்கள் நேற்று நியமிக்கப்பட்டனர். புதிய பிரதமரின் செயலாளர் மற்றும் அமைச்சரவை செயலாளர் உட்பட 18 அமைச் ☞ 7

### படுதோல்வியை அடுத்து

## தேர்தல்களிலிருந்து ஒதுங்கினார் ஜனா



இனிமேல் தேர்தல்களில் ☞ 7

### கல்விசார் ஒத்துழைப்புக்களுக்காக

## யாழ்ப்பாண பல்கலையுடன் தொடர்பாட முடியவில்லை

### சூடாநாட்டுக்கு வந்த சீனத் தூதர் குற்றச்சாட்டு




சீனா வடக்கு மக்களுடன் கல்வி மற்றும் கலாசார ரீதியான இருதரப்பு பரிமாற்றங்களை வளர்த்தெடுக்க விரும்புக்கின்றது. சீனாவிற்கு அது முக்கியமானதாக ☞ 2

## தேசியப் பட்டியல் யாருக்கு? ரணில் கூட்டில் முடிவில்லை

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் யாரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது என்பதை ஆராய்வதற்கான கூட்டம் இழுபறியில் முடிந்துள்ளது.

புதிய ஜனநாயக முன்னணிக்குக் ☞ 2

## ஐ.தே.க. செயற்குழுவை உடன் கூட்ட கோரிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவை உடனடியாகக் கூட்டுமாறு கட்சியின் செயற்குழு உறுப்பினர் லசந்த குணவர்தன, முன்னாள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். ☞ 7

### கடத்தப்பட்ட வாகனங்களை மோசடியாகப் பதிந்து

## ரூ. 500 மில்லியன் வரி ஏய்ப்புச் செய்த குற்றச்சாட்டில் 8 அதிகாரிகள் மீது வழக்கு

### லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல்

சுங்கவரி செலுத்தாமல் இலங்கைக்குக் கடத்தப்பட்ட 200 சொகுசுக் கார்களை மோசடியாகப் பதிவு செய்து 500 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக வரி ஏய்ப்புச் செய்தார்கள் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் உள்ளிட்ட 8 அதிகாரிகளுக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கணனியில் போலியான தகவல்களைப் பதிவு செய்தன் மூலம் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே முன்னிலையில் நேற்று இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ☞ 7



## புலித் தளபதிகளின் துப்பாக்கி முன்னாள் படை சிப்பாயிடம்?

### விசாரணையை இறுக்குகிறது பொலிஸ்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் வாவின்ன பகுதியில் ஞாயிற்றுக்கிழமை கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாங்களுடன் முன்னாள் படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப் பட்டார். அவரிடம் இருந்தது விடுதலைப்புலிகள் அமைப்பின் தளபதிகளால் பயன்படுத்தப் பட்ட 'பிஸ்ரல்' கைத்துப்பாக்கியா என்று பொலிஸார் துருவித் துருவி விசாரணை நடத்தி வருகின்றனர்.

சந்தேகநபரிடம் இருந்து கைத்துப்பாக்கி மற்றும் அதற்குரிய 143 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன. வாவின்னவின் பரகஹகலே என்ற இடத்தில் உள்ள வீடொன்றில் வைத்து ஞாயிறு மாலை கைது செய்யப்பட்ட நபர் பின்னர் இகினியாகல பொலிஸாரிடம் ☞ 2

## எளிய சம்பிரதாயங்களோடு நாடாளுமன்றம் தொடங்கும்

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளை ஆரவாரங்கள், ஆடம்பரங்கள் எதுவும் இன்றி மிக எளிமையாகத் தொடங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முப்படையினரின் மரியாதை, ஜெயமங்கல காதை இசைத்தல் போன்ற பாரம்பரிய நிகழ்வுகள் எவையும் இடம்பெறாது.

நாடாளுமன்ற அமர்வின் தொடக்க நிகழ்விற்கான சம்பிரதாய நடவடிக்கைகளை குறைக்குமாறு ஆளும் தரப்பினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய மிக எளிமையயான தொடக்க ☞ 2

### பிள்ளைப்பேறின் போது

## மன்னாரில் தாய், சேய் பரிதாபச் சாவு மருத்துவப் புறக்கணிப்பு காரணமா?

### விசாரணை அதிகாரிகள் இன்று விரைவு

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் மருத்துவப் புறக்கணிப்புக் காரணமான மீண்டும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பிள்ளைப் பேறுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தாயும் சேயும் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து இந்தக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான வனஜா பிள்ளைப் பேறுக்காக ☞ 7

## சபாநாயகர் தெரிவுக்கு நிஹாலை நிறுத்த முடிவு

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளை கூடவுள்ள நிலையில் அதன் சபாநாயகராக அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பட்டியை முன்மொழிய தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

நேற்று நடந்த முதலாவது ☞ 2

## இனி இது .....

படுதோல்வியடைந்துவிட்டார். இதையடுத்து அவர் தேர்தல்களில் தான் இனிப் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார். மறுபுறத்தில் வன்னியில் வெறும் 5 ஆயிரம் விருப்பு வாக்குகளால் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகி இருக்கிறார். பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலிலேயே ஆகக் குறைந்த விருப்பு வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற சாதனைக்கு அவரே சொந்தக்காரர் என்று அவரது கட்சியினரே ஏளனம் செய்கின்றனர்.

கூட்டமைப்பில் இருந்து வெளியேறி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் போய்ச் சேர்ந்துகொண்டு மற்றைய கட்சிகளையும் அதற்குள் இழுத்துவிட்டு நாங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கூவித் தரிந்ததில் முதன்மைப் பாத்திரம் ரெலோவிற்குத்தான் உண்டு. இந்த முயற்சி தற்கொலைக்கு ஒப்பானது, தமிழ் அரசுக் கட்சியின் வாக்குவங்கியைவிட்டால் தமதக்குத் தோல்விதான் என்று தெரிந்தும் இந்த விசப் பரீட்சைக்குச் சென்றது குறித்து ரெலோவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோவே தேர்தல் முடிவுகள் வெளிவரும் தருவாயில் தனது முகப் புத்தகத்தில் ஒரு பதிவை இட்டிருந்தார்.

இப்போது, கடந்த 25 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தும்கூட வெறும் 5 ஆயிரம் வாக்குகளை மட்டுமே பெற முடிந்திருக்கும் செல்வம் அடைக்கலநாதன் கட்சித் தலைமையிலிருந்தும் தேர்தலில் தோல்வியடைந்த ஜனா செயலாளர் பதவியிலிருந்தும் விலகவேண்டும் என்கிற அழுத்தம் கட்சிக்குள் பகிரங்கமாகவே வெடித்திருக்கின்றது. கட்சியை இளைஞர்களிடம் கொடுக்காவிட்டால் அதற்கு மீட்சி இல்லை என்று உள்வீட்டுக் கிளர்ச்சி கொந்தளிக்கத் தொடங்கியிருக்கிறது. கடந்த காலங்களைப் போன்று பணம் மற்றும் ஆயுதங்களைக்காட்டி இந்தத் தடவை இந்த எதிர்ப்பை தலைவர், செயலாளர் இருவராலும் அடக்கிவிட முடியாது என்றும் அப்படியில்லாமல் இருவரும் கட்சியை இளைஞர்களிடம் ஒப்படைக்க மறுத்தால், சிறிகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் பிரிந்து ரெலோவின் இரண்டாவது அணி உருவாகியதைப் போன்று மூன்றாவது அணி ஒன்றும் உடைந்து செல்லும் என்றும் ரெலோ உறுப்பினர்கள் பலர் என்னிடம் தெரிவித்தனர்.

இதற்கிடையில் ரெலோவின் வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தவரான சுரேன் குருசாமி, கட்சிக்குள் புதுக் கதையை அவிழ்த்துவிடத் தொடங்கியிருக்கிறார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில்தான் சுரேன் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டார். அந்தக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் எந்தவொரு ஆசனமும் கிடைக்கவில்லை. சுயேச்சைக் குழுவில் போட்டியிட்ட மருத்துவர் அருச்சுனாவால் எடுக்க முடிந்த வாக்குகளைக்கூடப் பெறமுடியாமல் படுதோல்வியடைந்தது ஜனநாயகக் கூட்டணி.

தேர்தல் நடைமுறைகளின்படி யாழ். மாவட்டத்தில் ஆசனங்கள் கிடைத்த கட்சிகளின் விருப்பு வாக்குகள் மட்டுமே எண்ணப்படுவது வழமை. அதன்படி தேசிய மக்கள் சக்தி, தமிழ் அரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், மருத்துவர் அருச்சுனாவின் சுயேச்சை ஆகியவற்றின் விருப்பு வாக்குகள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் எண்ணப்பட்டன. ஆனாலும் தனக்கு 20 ஆயிரம் விருப்பு வாக்குகள் இந்தத் தேர்தலில் விழுந்துள்ளன என்றும், தான் மீள் வாக்கு எண்ணிக்கைக்கு எழுதிக் கொடுத்திருக்கின்றேன் என்றும் கட்சிக்குள் தனது ஆதரவாளர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறாராம் சுரேன். வாக்கு மீள் எண்ணிக்கைக்கான கோரிக்கை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட முன்னர், அந்தந்தத் தொகுதி வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டதுமே முன்வைக்கப்படவேண்டும். அதற்குப் பின்னர் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இல்லையேல் நீதிமன்றத்தைத்தான் நாடவேண்டும். அப்படியிருக்க சுரேன் இப்படிக் கூறியிருப்பது விடயமறிந்த, தேர்தல் பற்றிய அறிவுள்ள ரெலோ உறுப்பினர்களுக்கு மேலும் கடுப்பைக் கிளப்பியுள்ளது.

தனக்கு பெரும் ஆதரவுத் தளம் இருப்பதாக ரெலோ உறுப்பினர்களில் ஒரு பகுதியனரையாவது நம்ப வைத்து, அதன் மூலம் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் தன்னை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்காகாவே அவர் இதனைச் செய்கிறார் என்று நம்புகின்றார்கள் அந்த விடயமறிந்த உறுப்பினர்கள். நாடாளுமன்றத் தேர்தலிலேயே ரெலோ தனக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஒன்றை தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தாவி வந்த சசிகலாவிற்குக் கொடுத்திருந்ததற்கும், தேர்தலில் தோல்வியடைந்ததற்கும் சுரேன் காரணம் என்று கொதித்துப் போயிருக்கும் உறுப்பினர்கள், மாகாணசபைத் தேர்தலையும் இலக்கு வைத்து அவர் காய் நகர்த்தத் தொடங்கியிருப்பதால் மேலும் கடுப்பாகிப் போய் இருக்கிறார்கள். எல்லாமாகச் சேர்ந்து விரைவில் கட்சிக்கு உள்ளேயும் பின்னர் வெளியேயுமாக வெடிக்கும் என்றே தெரிகிறது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது. ஆனாலும் இதற்காக யழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் சீனப் பல்கலைக் கழகங்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவதற்கு விரும்பி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தோடு தொடர்புகொள்கின்றபோது அவர்கள் உரிய முறையில் பதிலளிப்பதில்லை. இது குழப்பகரமான உணர்வை ஏற்படுத்துகின்றது என்று சீனத் தூதவர் கீ சென் ஹொங் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள அவர் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மிகப் பெரிய அளவில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது. அதுவும் தெற்கை மையப்படுத்திய ஒரு தேசியக் கட்சிக்கு யாழ்ப்பாணத்திலும் மிகப்பெரும்பான்மையாக ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

நான் இன்று பருத்தித்துறைக்குச் சென்றிருந்தேன். அங்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருந்த ஒரு வாக்கியத்தைப் பார்த்தேன். அதாவது பன்மைத்துவத்தில் ஒற்றுமை என்று இருந்தது.

உண்மையில் அந்த வாக்கியம் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சரியாவே பிரதிபலித்துள்ளது. தற்போது இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதையே காட்டுகின்றன.

நான் வடக்கு மாகாணத்துக்கு முதல் தடவையாகக் கொவிட் கால கட்டத்திலேயே வந்திருந்தேன். அந்தக் காலகட்டத்திலேதான் சினோபாம் கொவிட் தடுப்பூசிகளை சீன அரசு இலங்கைக்கு வழங்கி இருந்தது. அப்போது சினோபாம் என்ற எமது தடுப்பூசிகளை வடக்கு, கிழக்கு முழுவதும் முழுமையாகப் பாவிக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் சீன அரசு வலியுறுத்திக் கூறியிருந்தது. இவ்வாறு நாம் வலியுறுத்திக் கூறியதாலேயே இங்குள்ள மக்களுக்கும் அந்தத் தடுப்பூசிகள் பாவிக்கப்பட்டன.

வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கியிருக்கிறோம். அதேபோன்று ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளையும், மீன்பிடி உபகரணங்களையும் வழங்கினோம். வீட்டுத் திட்டமும் வழங்கியுள்ளோம்.

சீனாவினுடைய நீண்டகால நண்பனாக இலங்கை இருக்கின்றது. ஆகையினால் இலங்கை அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளையும் சீன அரசும் மதிக்கும். இலங்கை அரசுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒரு இணக்கப்பாட்டுக்கு முன்னேற்பாடான ஒரு ஒப்பந்தத்தை முதன் முதலில் சீனாதான் எழுதியது.

இலங்கையினுடைய மிக நெருக்கமான அயல்நாடாக இந்தியா இருக்கின்றது. அதனால் இலந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு பலப்படுவதையும், பொருளாதாரரீதியான நெருக்கம் பலப்படுவதையும் நாங்களும் விரும்புகின்றோம்.

டிசெம்பர் மாதத்தில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்று இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் கூறியிருக்கின்றார்.

இது மிகவும் சந்தோசமான விடயம். அவ்வாறு அவர் செல்வதை நாங்கள் விரும்புகின்றோம். அதன் பிற்பாடு இலங்கை ஜனாதிபதி அவருக்கு ஏற்ற வகையில் பொருத்தமான நேரத்தில் சீனாவுக்கான பயணம் செய்யலாம். ஏனெனில் சீனாவுக்கும் இலங்கை மக்களுக்கும் இடையில் பொருளாதார மேம்பாடுகளும் பரிமாற்றங்களும் வளர்ந்து வர வேண்டுமென்றே நாங்களும் விரும்புகின்றோம்.

சீனாவுக்கு வடக்கு மக்களுடன் செய்யவேண்டிய கலாசார மற்றும் கல்வி ரீதியான இரு தரப்பு பரிமாற்றங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன.

சீன அரசு இலங்கைக்கு அதிகூடிய வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் வழங்குகின்ற ஒரு நாடாகவே இருந்து வருகின்றது. சீனாவைப் பொறுத்தவரையில் இலங்கை மக்களின் ஆற்றலும் திறமையும் வளர்க்கப்பட வேண்டும் என்றே கருதுகின்றது.

எனக்குத் தெரிந்தவரைக்கும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் சீனாசார் பல்கலைக் கழகத்துக்கும் இடையில் கல்விசார் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

நான் அறிந்தவரையில் சீன புலமையாளர் யாழ். பல்கலைக்கழகத்திலும், யாழ். பல்கலைக்கழகப் புலமையாளர்கள் சீனப் பல்கலைக்கழகத்திலும் தங்களுடைய கற்கை நெறிகளைக் கற்று வருகின்றார்கள்.

இருப்பினும் என்னுடைய சக உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் சீனப் பல்கலைக் கழகங்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவதற்கு விரும்பி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தோடு தொடர்புகொள்கின்றபோது அவர்கள் உரிய முறையில் தொடர்பை ஏற்படுத்துவதில்லை என்பது குழப்பகரமான உணர்வைத் தருகின்றது - என்றார்.

## சபாநாயகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைக் கூட்டத்தில் சபை முதல்வராக அமைச்சர் பிமல் ரத்நாயக்கவையும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராக அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸவையும் நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பிரதி சபாநாயகராக நியமிப்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் நாளை இடம்பெறும்போது சபாநாயகர் தேர்வு செய்யப்படுவார். சபாநாயகர் பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்மொழியப்பட்டால் வாக்கெடுப்பு நடத்தப்படும் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

சபைத் தலைவர் மற்றும் ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் பதவிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட இரண்டு பேரையும் ஆளும்தரப்பு தெரிவித்த பின்னர், அவர்களின் பெயர்களும் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவு செய்யப்படவுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் பதவி மற்றும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவி ஆகியவற்றுக்கான பெயர்கள் புதிய சபாநாயகரால் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும்.

## புலித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்பட்டார்.

அம்பாறை விசேட அதிரடிப் படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக தானியங்கி 'பிஸ்ரல்' மற்றும் இரண்டு ரவைக்கூடுகள், ஆயுதங்களை சுத்தம் செய்யும் கருவி என்பன இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் 51 வயதான ஓய்வுபெற்ற தரைப்படையின் சிறப்புப் பிரிவில் பணியாற்றியவர். அவரது வீட்டுக் காணியில் புதைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த மைக்ரோ 'பிஸ்ரல்' மற்றும் ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மீட்கப்பட்ட துப்பாக்கியின் இலக்கம் அழிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட துப்பாக்கி விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் பயன்படுத்தியதா அல்லது இராணுவ களஞ்சிய சாலையில் இருந்து திருடப்பட்டதா என்கிற கோணத்தில் பொலிஸார் துருவி ஆராய்ந்து வருகின்றனர்.

## எளிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகளுக்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

அரசுத் தலைவர், நாடாளுமன்றத்திற்கு வந்தவுடன், நியமிக்கப்பட்ட அவரது அறைக்கு நேரடியாகச் செல்வார் என்று ரோஹணதீர விளக்கினார். சில நிமிடங்கள் அங்கு செலவழித்த பிறகு, நாடாளுமன்ற மணியானது கூட்டத்தொடர் தொடங்குவதைக் குறிக்கும் வகையில் ஒலிக்கும், பின்னர் அரசுத் தலைவர் அவைக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

இந்த எளிமையான அணுகுமுறை புதிய நாடாளுமன்றம் அதன் வழக்கமான சடங்கு மரபுகளில் இருந்து விலகுவதைக் குறிக்கிறது என்று சுட்டக்காட்டப்படுகின்றது.

## தேசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த 2 தேசியப் பட்டியலில் ஒன்றுக்கு அந்தக் கூட்டைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்துவைத்திருந்த ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். கூட்டணிக்குள் இருந்த ஏனைய கட்சிகளின் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் முன்னணியின் செயலாளரால் தேர்தல் ஆணையாளருக்கு ரவி கருணாநாயக்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அதனடிப்படையில் விசேடவர்த்தமானி மூலம் ரவி கருணாநாயக்க நாடாளுமன்ற உறுப்பினராகவும் அறிவிக்கப்பட்டுவிட்டார்.

ரவி கருணாநாயக்கவின் நியமனம் சட்டவிரோதமானது என்று ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் வஜிர அபேயவர்த்தன அறிவித்திருந்தார். தமது முன்னணிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் இடங்களுக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் செவ்வாய்க்கிழமை ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூட்டணித் தலைவர்கள் கூடி ஆராய்வார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அதன்படியே கொழும்பு மால் வீதியில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில், எரிவாயு சிலிண்டரில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர்கள் கலந்துகொண்டு தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிக்கு யாரை நியமிப்பது என்று ஆராய்ந்தனர்.

முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை நியமிப்பது பொருத்தமானது என பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது. ஆனால், அனுபவம் வாய்ந்த தலைமைத்துவத்தை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் வகையில் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அனுப்ப வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன அங்கு பரிந்துரைத்துள்ளார்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் தரப்பிலிருந்து ஒருவரைத் தேசியப் பட்டியல் மூலம் அனுப்புவதே பொருத்தமானது என கூட்டத்தில் கலந்துகொண்ட நிமல் லான்சாவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தமது சார்பில் ஒருவரை முன்மொழிந்ததால் எஞ்சியிருக்கும் ஒ-ரு தேசியப் பட்டியல் இடம் மூலம் யாரை அனுப்புவது என்று எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

மீண்டும் கூடி இது தொடர்பில் ஆராய்வது என்று கூட்டணித் தலைவர்கள் அனைவரும் இணங்கியதுடன் கூட்டம் நிறைவுக்கு வந்தது.

# அமெரிக்காவில் இலங்கை மாணவர் எண்ணிக்கை 10 வீதமாக அதிகரிப்பு

## ஓபன் டோர்ஸ் அறிக்கையில் தகவல்

அமெரிக்காவில் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை 10 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் இதனால் கல்வி தொடர்புகள் வலுவடைவதாகவும் ஓபன் டோர்ஸ் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

2024ஆம்ஆண்டிற்கானசர்வதேச கல்வி பரிமாற்றத்தின் கதவுகள் அறிக்கையின்வெளியீட்டைஅமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ளது.

2023-2024 கல்வி ஆண்டில்அமெரிக்காவில் உள்ள பல்கலைக் கழகங்களில்கல்வி பயிலும் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை 10 வீதத்தால்அதிகரித்துள்ளது. இதுஉலகத் தரமான கல்வியைத் தேடும் இலங்கை மாணவர்களின் வளர்ந்துவரும் ஒரு நற்செய்தியாகும் மற்றும் இரண்டு நாடுகளுக்கிடையேயான வலுவான கல்வி உறவுகளை எடுத்துக்காட்டுவதாகவும் அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

ஓபன் டோர்ஸ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

இலங்கைமற்றும்அமெரிக்காவுக்கு இடையிலான இராஜதந்திர உறவின் 75 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிலையில், சர்வதேச மாணவர்களின் இயக்கங்களை மிக விரிவாகப் பதிவுசெய்து வருகின்றது. இவ்வாண்டு அறிக்கை, உலகின் 210இற்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 1.12 மில்லியன் சர்வதேச மாணவர்களை அமெரிக்கா வரவேற்றதை வெளிப்படுத்துகிறது. இது அமெரிக்காவை உயர் கல்விக்கான முன்னணி இடமாக உறுதிப்படுத்துகிறது. மேலும், கல்வி அமெரிக்கா

பெயரில் உலகளாவிய கல்வி ஆலோசனை நெட்வொர்க்கின் 25ஆவது ஆண்டும் இம்முறை கொண்டாடப்படுகிறது.

அமெரிக்காவில் இலங்கை மாணவர்கள் அதிகரித்திருப்பது, முன்னோடியான கல்வி, ஆராய்ச்சி வாய்ப்புகள் மற்றும் பரந்த மாணவர் அனுபவங்களை வழங்கும் அமெரிக்க உயர் கல்வி நிறுவனங்களின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது.

இது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க தூதர் ஜூலி சங் தெரிவிக் கையில் -

அமெரிக்காவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களின் 10 வீத அதிகரிப்பு, மக்கள் இடையே வலுவான தொடர்புகளை உருவாக் கும் சர்வதேச கல்வி யின் சக்தியை வெளிப்ப டுத்துகிறது. அமெரிக்க பல்கலைக்கழகங்கள் இலங்கை மாணவர் களுக்கு உலகத்தரமான கல்வி, முன்தோற்றமான ஆராய்ச்சி மற்றும் வாழ்க்கைமுழுவதற்குமானவலுவானதொடர்புகளை வழங்குகின்றன. இவ்வளர்ச்சி, அமெரிக்கா - இலங்கைக்கிடையிலான கல்வி ஒத்துழைப்பின் வலிமையையும் கல்வி மற்றும் புதுமையைக் கொண்டாடும் எங்கள் பொது அர்ப்பணிப்பையும் எடுத்துக் காட்டுகிறது. கல்வி அமெரிக்கா போன்ற திட்டங்கள் மூலமாக, இந்த கலாசார பரிமாற்றத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஆதரிக்க அயராது முயற்சி செய்கிறோம்.- என்றார்.

அமெரிக்க கல்வி நிறுவனங்களின் மேம்பட்ட ஸ்ரீம்(விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்) பாடத்திட்டங்கள், ஆராய்ச்சி வசதிகள் மற்றும் நடைமுறை பயிற்சி வாய்ப்புகள் இலங்கை மாணவர்களை ஈர்க்கின்றன. இவ்வாறு பலர் முதுநிலை படிப்புகளைத் தேர்ந்தெடுத்து, இரு நாடுகளுக்கும் இடையேயான வலுவான பங்களிப்புகளை உருவாக்கும் ஓர் உலகளாவிய வலையமைப்பின் பகுதியாகிவிடுகின்றனர்.

ஓபன் டோர்ஸ் அறிக்கையின் வெளியீடானது, சர்வதேச கல்வி வாரம்(ஐந்நூறு) உடன் இணைந்து அமைந்துள்ளது. இது சர்வதேச கல்வியின் நன்மைகளை முன்னிலைப்படுத்துவதற்கும் மாணவர்களை உலகளாவிய கல்வி மற்றும் கலாசார பரிமாற்றங்களில் ஈடுபட ஊக்குவிப்பதற்கும் மையமாக விளங்குகின்றது.

அமெரிக்காவில் கல்வியைத் தொடர ஆர்வமுள்ள இலங்கை மாணவர்கள், கல்வி அமெரிக்கா மூலமாக இலவச ஆதரவுகள் மற்றும் ஒருங்கிணைந்த ஆலோசனைகளைப் பெற முடியும். மேலதிக தகவலுக்கு, கல்வி அமெரிக்கா அல்லது கொழும்பு அமெரிக்க தூதரகத்தின் ஆலோசனை மையத்தை தொடர்பு கொள்ள முடியும்.

# சாரணர்களுக்கு நீச்சல் பயிற்சி






(றிபாஸ்)

சாரணமாணவர்களுக்குநீச்சல்பயிற்சிவழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பெப்ல்ஸ் சர்வேதேச பாடசாலையின் நீச்சல் தடாகத்தில் இடம் பெற்றது.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின்ஏற்பாட்டில்மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெப்பையின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கமைத்திருந்த இந் நிகழ்வில் பல பாடசாலைகளிலிருந்தும் பெருந்தொகை சாரணர்கள் கலந்து கொண்டதுடன் மாவட்ட சாரணர் சங்கத்தின் பதக்கச் செயலாளர் எம். ஐ. ஜெயீனுடீன் தலைமையிலான பயிற்றுவிப்பாளர்கள் சாரணர்களுக்கான நீச்சல் பயிற்சியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்விசார் மற்றும் கல்விசாரா சங்கங்கள் ருஹூணுப் பல்கலையில் போராட்டம்

ருஹூணு பல்கலைக்கழகத்தில் கல்விசார் மற்றும் கல்விசாரா சங்கங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணி முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ருஹூணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவை அப்பதவியில் இருந்து நீக்குமாறு கோரி இந்த பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கல்விசார் மற்றும் கல்விசாரா சங்கங்கள் தற்போது ருஹூணு பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் பேரணியாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

# தம்பலகாமத்தில் காணி கச்சேரி!





(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான காணி கச்சேரி நேற்று (செவ்வாய்க்கிழமை) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த காணி கச்சேரியில் புதுக்குடியிருப்பு, கல்மெடியா வடக்கு, பாலம்போட்டாறு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டு இதன் போது பயனடைந்தனர்.

குடியிருப்பு பகுதியில் தங்களுக்கான நிரந்தரமாக குறித்த காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களை எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்தகாணிகச்சேரியானதுதம்பலகாமம்பிரதேச செயலக காணிக்கிளையினர் முன்னெடுத்தனர்.

இதில் குறித்த பகுதிகளின் கிராம சேவகர்கள், காணி உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை சாஹிராவின் 75ஆவது ஆண்டு நிறைவு






(ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பவள விழா சிறப்புநிகழ்வுதிங்கட்கிழமைகல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் முதுசங்களான முன்னாள் பொறுப்பு அதிபர்கள், அதிபர் கரத்தில் உள்ள




அதிபர்கள் மற்றும் தற்போது பாடசாலையில் கடமையாற்றுகின்ற அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள்எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்லூரி ஆரம்பித்து அதன் 75 ஆவது நினைவினைக் கொண்டாடும் முகமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளும்வகையிலான பெரிய கேக் ஒன்று வெட்டியும் மாணவர்கள் மற்றும் அதிதிகளுக்கு இனிப்புகள் வழங்கியும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் அதிபர் ஏ. பீர்முஹம்மட் பாடசாலையின் வரலாறு பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக பாடசாலையின் பழைய மாணவரும் முன்னாள் அதிபருமான சட்டத்தரணி எம்.சி.ஆதம்பாவா கலந்து கொண்டதோடு, பாடசாலையின் முன்னாள் அதிபர்களான எம்.எம்.இஸ்மாயில், ஐ.எல். ஏ. மஜீத், ஹம்ஸா, இசட். காலித், அஹமட்லெப்பை, அஸீஸ், பாடசாலையின் அபிவிருத்திநிறைவேற்றுக் குழுவின் செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர் மற்றும் நிறைவேற்றிக் குழு உறுப்பினர் ரிஸ்வான் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கண்டு இந்நிகழ்வை சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமைச்சரவை காட்டியது நல்ல செய்தியல்ல

தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரவை திங்கட்கிழமை பதவியேற்றது. அரசுத் தலைவருடன் சேர்த்து 22 அமைச்சர்களுக்குப் பொறுப்புக்கள் பகிரந்தளிக்கப்பட்டன. அவர்களில் இரண்டு பேர் மட்டுமே தமிழர்கள். மலையகத்ததைச் சேர்ந்தவர்கள். அமைச்சரவை நியமனத்தைத் தொடர்ந்து நேற்று அமைச்சுச் செயலாளர்கள் நியமனம் இடம்பெற்றது. அதில் ஒரு தமிழருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைமற்றும்அமைச்சுச்செயலாளர்நியமனங்களில் முஸ்லிம்களில்ஒருவருக்குக்கூட நியமனம் வழங்கப்படவில்லை. இதற்கு முந்தைய ஆட்சிகளில் மிகக் குறைவாக இருந்தபோதும் தமிழர்கள், முஸ்லிம்கள் என்று எண்ணிக்கையில் குறைவான இரு இனங்களுக்குமே அமைச்சரவையிலும் அமைச்சுச் செயலாளர்களிலும் இடமளிக்கப்பட்டு வந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி அந்த நடைமுறைக்கு மாறாக ஒரு இனத்தை முற்றிலுமாகப் புறமொதுக்கி இருப்பது கவனத்திற்குரியதாகவும் கவலைக்குரியதாகவும் இருக்கின்றது.

இலங்கையின் சனத்தொகையின் அடிப்படையிலும் 22 பேர் கொண்ட அமைச்சரவையில் குறைந்தது 6 பேராவது தமிழ், முஸ்லிம் இனங்கைளச்சேர்ந்தவராகள இருந்திருக்கவேண்டும். இனவாதத்தைக் கடந்த ஆளும் தரப்பு என்று தன்னைக் கூறிக்கொள்ளும்தேசிய மக்கள் சக்தி, கடந்த கால ஆட்சிகளின் குறுகிய பார்வையோடு நடந்துகொள்ளமாட்டுன் என்று கூறுகின்றபோதும் தனது அமைச்சரவையிலும் அமைச்சுச் செயலாளர் நியமனத்திலும் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்காமல் சிங்களவர்களுக்கு மட்டும் அதனை வழங்குவது அதன் நோக்கத்திற்கும் செயலுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் காட்டுகின்றது.

புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இலங்கையில் பௌத்த சிங்களப் பெரும்பான்மையினம் 74 சதவீதமாகவும் ஈழத் தமிழர்கள் 11.2 சதவீதமாகவும் முஸ்லிம்கள் 9.3 சதவீதமாகவும் மலையகத் தமிழர்கள் 4.1 சதவீதமாகவும் காணப்படுகின்றனர். எனினும் அமைச்சரவையில் 91 சதவீதம் சிங்களவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.அமைச்சின்செயலாளர்கள்நியமனத்திலும் அதே நிலைதான். பிரதி அமைச்சர்கள் நியமனத்தில் இதனை ஈடுசெய்ய முடியும் என்பது சரியானது அல்ல. அங்கும் குறைந்தபட்சம் இனவிகிதாசார அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவேண்டிய நிலையில் அமைச்சரவை நியமனங்களை அதில் ஈடுசெய்வதாகச் சொல்வதில் நியாயமில்லை. குறைந்தபட்சம் அமைச்சரவையில் 4 தமிழர்களுக்கும் 2 முஸ்லிம்களுக்கும் இடமளிக்கப்பட்டிருக்கவேண்டும்.

கடந்த காலங்களிலும் அமைச்சரவை உள்ளிட்ட நியமனங்களில் இதேபோன்ற புறக்கணிப்பே இடம்பெற்றது. தேசிய மக்கள் சக்தி மாற்றத்திற்கானது என்றால், அந்த மாற்றம் பிரதிபலித்திருக்கவேண்டிய முதல் நகரிவிலேயே அது பிரதிபலிக்காமல் போயிருப்பது வேதனைக்குரியது. ஏமாற்றத்திற்குரியது. உண்மையில் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களினதும் 200 ஆண்டுகளாக அடிமைத் தொழிலாளிகள் போன்று நடத்தப்படும் மலையகத் தமிழர்களனதும் நலன்களைக் கவனிக்கும் வகையிலும் அவர்களைப் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு ஈடாகத் தூக்கி நிறுத்தக்கூடிய வகையிலும் நியாயத்தின் அடிப்படையில் அமைச்சரவையில் அவர்களுக்கு உரிய இடத்திலும் பார்க்க அதிக இடங்களை ஆட்சியாளர்கள் ஒதுக்கிக்கொடுக்கவேண்டும்.

பெரும்பான்மை பௌத்த, சிங்கள ஆட்சியாளர்கள் தாம் ஒடுக்கப்பட்டுவந்தோம் என்று தமிழ், முஸ்லிம் மக்கள் உணர்கின்றார்கள் என்பதை அமைச்சரவைப் பதவியேற்பு நிகழ்வில் தான் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க, அப்படி ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களினதும் சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பே தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்தில் அமரவைத்த மாற்றம் என்றும் கூறியிருந்தார். அப்படியிருந்தும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் அவர் தனது அமைச்சரவையைக் கட்டமைக்காததும் அது போக்கில் தொடர்ந்தும் செயற்படுவதும் நல்ல செய்திகள் அல்ல.

# ட்ரம்ப் இரண்டாம் பதவிக் காலத்தில் இந்திய - அமெரிக்க உறவு பலப்படும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா



இந்திய - அமெரிக்க உறவை வெளிப்படுத்தும் வண்ணம் டொனால்டு ட்ரம்ப் - நரேந்திர மோடி இடையிலான நீண்ட உறவு அமைந்துள்ளது. இருநாட்டுவலுவான ராஜதந்திர உறவுகள், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் வெளிப்படையான அரசியல் அரவணைப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### மோடி - ட்ரம்ப் நட்பு:

பிரதமர் மோடி, டொனால்டு ட்ரம்ப் ஆகிய இரு தலைவர்களும் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்த முன்னுரிமை அளித்துள்ளனர். குறிப்பாகபயங்கரவாதத்தைஎதிர்கொள்வதிலும், பாகிஸ்தானால் முன்வைக்கப்படும் பிராந்திய அச்சுறுத்தல்களுக்கு தீர்வு காண்பதிலும் முன்னுரிமை அளித்துள்ளனர்.

சுதந்திரமான இந்தோ-பசிபிக்தொடர்பான அவர்களின் பார்வை நெருக்கமான ஒத்துழைப்புக்கும் வழிவகுத்துள்ளது. கூட்டு ராணுவப் பயிற்சிகள் மற்றும் குவாட் கூட்டணியில் இந்தியாவின் பங்கு உள்ளிட்ட பாதுகாப்பு விஷயங்களில் இரு நாடுகளின் ஒத்துழைப்பை ஆழமாக்கியும் உள்ளது.

அத்துடன் 2019இல் ஹவுடி மோடி, 2020இல் நமஸ்தே ட்ரம்ப் போன்ற நிகழ்ச்சிகள் இரு தலைவர்களின் தனிப்பட்ட நெருக்கத்தை காட்டியது. இந்த நிகழ்வுகள் அவர்களின் பரஸ்பர நட்புறவை வெளிப்படுத்தியது. ராஜதந்திர உறவை வலுப்படுத்தவும் உதவியது.

வரிவிகிதம் மீதான கருத்து வேறுபாடுகள் போன்ற சவால்கள் இருந்தபோதிலும், இரு தலைவர்களும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தினர். கரோனா பெருந்தொற்று காலத்தில் இரு தலைவர்களின் ஒத்துழைப்பு சுகாதார திட்டங்களுக்கும் விரிவடைந்ததும் இங்கே நினைவுகூரத்தக்கது.

தற்போது அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள டொனால்டு ட்ரம்பின் நிர்வாகத்தின் கீழ் இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவு விரிவடையும் என்றாலும், இறக்குமதி, வரிகள் மற்றும் குடியேற்றம் போன்ற சில விவகாரங்களில் அமைதியின்மை இருக்கலாம் என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

மோடி, ட்ரம்ப் இடையே ஆழமான நட்பு இருப்பதால் இரு நாடுகளுக்கு இடையேயான கடினமான விவகாரங்களும் சுமுகமாக தீர்க்கப்படும் என்ற பார்வையும் முன்வைக்கப்படுகிறது.

தனது தேர்தல் பரப்புரையின்போது, டொனால்டு ட்ரம்ப், வெளிநாட்டுப் பொருள்களுக்கு, குறிப்பாக சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குஅதிககட்டணங்கள்விதிக்கப்படும். ஒரு மிகப் பெரிய நாடு கடத்தும் திட்டத்தை வடிவமைத்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறி யிருப்பவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் உறுதியளித்திருந்தார்.

அமெரிக்காவின் அதிபராக ட்ரம்பின் வெற்றி உறுதியானதன் சில மணி நேரங்களில், குடியரசுக் கட்சியின் முன்னணி பிரமுகர்கள், பழமைவாத அறிவுஜீவிகள், 21-ம் நூற்றாண்டை வடிவமைப்பதில் இந்தியா - அமெரிக்காவின் எதிர்கால உறவு முக்கியப் பங்கு விகிக்கும் எனக் கருதினர் என்று கேபிடல் ஹில்லின் மூத்த மற்றும் தகவல் தொடர்பு வியூக வகுப்பாளர் அனாங் மிட்டல் தெரிவித்திருந்தார்.

அத்துடன் டொனால்டு ட்ரம்ப், பிரதமர் மோடியுடனான தனது தனிப்பட்ட உறவின் மூலமாகவே இந்திய - அமெரிக்க உறவை மேலும் வலுவாக்குவார்.

### வர்த்தக பாதுகாப்பு முதலீடு:

மேலும் வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் நேரடி அந்நிய முதலீடு போன்றவற்றில் இரு தரப்பு ஒப்பந்தங்கள் ஏற்படலாம். இந்தோ - பசிபிக் கூட்டாளிகளிடத்தில் அமெரிக்காவின் நம்பகத்தன்மையை உருவாக்குவதே ட்ரம்பின் முதன்மையான நோக்கமாக இருக்கும்.

அந்தப் பிராந்தியத்தில் சீனாவின் ஆளுமையை கட்டுப்படுத்துவதற்கு அவர் முயற்சிக்கிறார். சிலிக்கான் பள்ளத்தாக்கு தலைவர்களுடனான ட்ரம்பின் நெருக்கம் சாதகமானதாகவே இருக்கும். அவர்கள் இந்தியச் சந்தையை விரிவுபடுத்துவதையும், இந்திய நுகர்வோர் தளத்தையும், அமெரிக்க தொழில்நுட்பத் துறையில் இந்தியாவின் மனித மூலதனத்தை விரிவடையச் செய்வதை நோக்கமாக கொண்டுள்ளனர்.

அடுத்த ஆண்டு ட்ரம்ப் ஐரோப்பா மற்றும் ஆசியாவுக்கு செல்லும்போது பலதரப்பட்ட கூட்டங்களில், ஏதாவது ஒன்றில் நேரடி சந்திப்புகள் நடைபெறும். 2025-ல் ட்ரம்ப் இந்தியா செல்வார் அல்லது மோடியை அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கலாம்.

குடியேற்றம், வர்த்தகப் பற்றாக்குறை அல்லது



இந்தியா - கனடா இடையேயான தூதரக உறவுகளில் விரிசல் என சிறு சிறு சிக்கல்கள் இருந்தபோதிலும் இந்திய - அமெரிக்க உறவு தொடர்ந்து விரிவடையும் என தெரிவிக்கப்படுகிறது.

### ட்ம்பின் வரலாற்று வெற்றி:

இதனிடையே ட்ரம்பின் வரலாற்று வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்த உலகத் தலைவர்களில் முக்கியமானவர் பிரதமர் மோடி. அவரது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், அதிபர் தேர்தலில் வரலாற்றுசிறப்புமிக்கவெற்றிபெற்றுள்ளஎன்நண்பர் டொனால்டு ட்ரம்புக்கு இதயபூர்வமான வாழ்த்துகள். உங்களுடைய முந்தைய பதவிக்காலத்தைப் போலவே, இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த உங்களுடன் இணைந்து செயல்பட ஆவலுடன் உள்ளேன்.

இருநாட்டு மக்களின் மேம்பாட்டுக்காகவும், உலக அமைதி, ஸ்திரத்தன்மை, வளம் ஆகியவற்றை மேம்படுத்தவும் நாம் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

### ட்ரம்பின் கடினமான கொள்கைகள் :

குடியேற்றம் மற்றும் கட்டணங்கள் போன்றவை மீதான ட்ரம்பின் கடினமான கொள்கைகள் சுட்டிக்காட்டும்நிபுணர்கள், இவற்றில்அமெரிக்காவுடன் இந்தியா சில கடினமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டி இருக்கும் என்கின்றனர்.

ஜோ பைடனின் நிர்வாகத்தின் கீழ், இந்திய - அமெரிக்க உறவு பாதுகாப்பு, முக்கியமான தொழில்நுட்பங்கள், வர்த்தகம் மற்றும் இந்தோ - பசிபிக் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த ஒத்துழைப்பு ஆகியவற்றில் ஏற்றம் கண்டிருந்தன. எனினும், சீக்கிய பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுனை அமெரிக்க மண்ணில் வைத்து கொல்வதற்கான முயற்சி முறியடிக்கப்பட்டதாக கூறப்படும் குற்றசாட்டில் கொஞ்சம் அழுத்தம் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பன்னுனை கொல்லும் சதித் திட்டத்தில் இந்திய அரசின் உளவு ஊழியருடன் இணைந்து இந்தியரான நிகில் குப்தா பணியாற்றினார் என்று அமெரிக்க பெடரல் வழங்கறிஞர்கள் குற்றம்சாட்டினர்.

இந்த விவகாரத்தில் உள்ள குற்றச்சாட்டை சரிசெய்யுமாறு இந்தியாவை அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள இந்தியா, இதுகுறித்து விசாரிக்க விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது கவனிக்கத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டு உதவியில் அபிவிருத்தி செய்வேன்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி.



(பர்ஸான்)

ஜனநாயக நாட்டில் தேர்தல் காலங்களில் ஒருவரையொருவர் விமர்சிப்பது வழக்கமான ஒரு விடயம்தான். அதுதான் வாழ்க்கை என்று நினைத்துவிடக் கூடாது என்று எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்ற தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமைக்காக பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாலில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில் –

தேர்தல் காலங்களில் மாற்றுக் கட்சிக் காரர்களுக்கு நாங்கள் பேசி இருப்போம். அவர்கள் எங்களுக்கு பேசி இருப்பார்கள். அதையெல்லாம் மறந்து இனிவரும் காலங்களில் நாம் அனைவரும் சகோதரர்கள் எனும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

மீராவோடை வைத்தியசாலை மிகத் தரமான வைத்தியசாலையாக மாற்றப்பட வேண்டும். கல்குடா தொகுதி மக்கள் பயனடையும் விதத்தில் ஐ.சி.யு உட்பட அனைத்து வசதிகளும் கொண்ட மிகப் பலமான ஒரு வைத்தியசாலையாக மாற்றப்பட வேண்டும் என்று நான் நினைத்துள்ளேன்.

இந்த நாட்டின் உதவி இல்லா விட்டாலும் வெளிநாட்டு உதவியைக் கொண்டு காணிகளை வாங்கி கட்டடங்களைக் கட்டி அனைத்து வளங்களையும் கொண்ட ஒரு வைத்தியசாலையாக அதனை நான் மாற்றுவேன்.

அத்தோடு, கல்வியில் பல மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். இதெல்லாம் செய்வதாக இருந்தால் நமக்குள் அரசியல் வேறுபாடுகள் இருக்கக் கூடாது.

முஸ்லிம் காங்கிரஸ் என்றும் எஸ்.ஜே.பி. என்றும் என்.பி.பி. என்றும் நாங்கள் இருந்தால் இந்த அபிவிருத்திப் பணிகளை செய்ய முடியாது. நாங்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டால் மாத்திரமே இதனை செய்ய முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிப் பிரச்சினை காணப்படுகிறது. நான் ஜனாதிபதியை சந்தித்து விசேட ஆணைக்குழுவை அமைத்து காணிப் பிரச்சினை, பிரதேச சபை பிரச்சினை, எல்லைப் பிரச்சினை, நிருவாகாப் பிரச்சினை ஆகிய எல்லாவற்றுக்கும் தீர்வு காண நடவடிக்கை எடுப்பேன். – என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும், கல்குடா தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி ஹபீப் றிபான், ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாகத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# சுழிபுரத்தில் வாளுடன் அட்டகாசம் செய்த இளைஞனை மடக்கிப் பிடித்த ஊரவர்கள்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பாண்டவட்டை பகுதியில் வாளுடன் அட்டகாசம் செய்த 18 வயதுடைய இளைஞன் ஒருவர் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞனை வட்டுக்கோட்டை பொலிஸிடம் ஒப்படைத்த நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத மாட்டிறைச்சி விற்று வந்த ஒருவர் கைது

களுத்துறை, பண்டாரகம, அட்டுலுகம பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாட்டிறைச்சி விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரொருவர் திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார் என பாணந்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் களுத்துறை, பண்டாரகம பிரதேசத்தில் வசிக்கும் 48 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 39 கிலோ 950 கிராம் மாட்டிறைச்சி, 02 கன்றுக் குட்டிகள் மற்றும் 2 மன்னா கத்திகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பண்டாரகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# 150 லீற்றர் கசிப்புடன் 30 பேர் காத்தான்குடியில் திடீர் கைது



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் 150 லீற்றர் கசிப்பு போதைப்பொருளுடன் 30 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது கசிப்பு விற்பனை செய்யும் இடங்கள் கசப்பு உற்பத்தி நிலையங்கள் என்பன பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டன.

மறைத்து வைக்கப்பட்ட நிலையிலும், விற்பனை செய்யப்பட்ட நிலையிலும் சுமார் 150 லீற்றர் கசிப்புகளும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பெருமளவிலான உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதுடன், காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# வித்தகர் விருது பெறும் இரு கல்வியியலாளர்கள்





கிழக்கு மாகாணத்தின் உயரிய விருதான 'வித்தகர்' விருதினை கல்முனை பிராந்தியத்தின் இரு கல்வியியலாளர்கள் நாளை(வியாழக்கிழமை) திருகோணமலையில் நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் பெற்றுக்கொள்ள இருக்கிறார்கள்.

ஒருவர் காரைதீவைச் சேர்ந்த பிரபல ஊடகவியலாளரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான தேசமான்ய விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா அவர்கள்.

மற்றவர் பாண்டிருப்பைச் சேர்ந்த ஓய்வு நிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர் பைந்தமிழ் குமரன் ஜெ. டேவிட் அவர்கள்.

**வித்தகர் வி.ரி.சகாதேவராஜா**

36 வருடங்கள் கல்விப் பணியாற்றிய சகாதேவராஜா, சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரே ஓர் உதவிக் கல்விப் பணிப்பாளரும், சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தின் தலைவருமாவார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் மிகவும் நெருங்கிய பற்றாளனான இவர், பத்து வருடங்கள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் 26 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக கலைத்துறை பட்டதாரியான இவர், மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராவார். பட்டப்பின் கல்வி டிப்ளோமோ மற்றும் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றவராவார்.

இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபராவார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவராக காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த பணிமன்றத் தலைவராக இந்துசமய விருத்திச்சங்க தலைவராக காரைதீவு விளையாட்டு கழகத் தலைவராக கம்பன் கலைக்கழகத் தலைவராக கிராம அபிவிருத்தி சங்க தலைவராக இவ்வாறு பல அமைப்புகளில் தலைவராக முன்னணி சமூக செயற்பாட்டாளரான அவர் ஒரு தலைசிறந்த ஊடகவியலாளரும் கூட.

சம காலத்தில் மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் ஆலோசகராக மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகராக இவ்வாறு பல நடிபங்குகளினூடாக சமூக சமய சேவையாற்றி வருகிறார்.

காரைதீவின் பழம்பெரும் ஆசிரியர் வே.தம்பிராஜா தங்கநாயகம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

காரைதீவில் 1964.09.28 அன்று பிறந்தார் .

ஆரம்பக்கல்வியை ராமகிருஷ்ணசங்க ஆண்கள் பாடசாலையிலும் பின்னர் விபுலானந்த மத்திய கல்லூரியிலும் மற்றும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் கல்வி பயின்றார்.

'ஊழியில் ஆழி' எனும் வரலாற்று நூலை 2005 வெளியிட்டார். மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் மன்ற தலைவராக பணியாற்றிய வேளை அங்கு 'கலைச்செல்வி' நூலுக்கு நூலாசிரியராகவும் சுவாமி விபுலானந்த பணிமன்றத்தின் அடிகளார் நினைவாலய மலருக்கும் சுவாமி நடராஜானந்தா ஜீயின் நூற்றாண்டு விழாவில் சேவையின் சிகரம் எனும் நூலையும் ஊரா வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையின் அதிசிறந்த ஊடக விருதான மக்கள் சேவை ஊடக விருது 2007 வீரகேசரி கட்டுரை வெளியீட்டுக்காக பெற்றார் .

இத்தாலி, பாங்க்கொக், மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு சென்று சிறப்பு அனுபவத்தை பெற்றிருந்தார்.

தேசமான்ய வித்தகர் திகாமடுல்ல அபிமானி விபுலமாமணி வாழ்நாள் சாதனையாளர், வித்யசாஹித்யன், வித்யகலாசிறி, கலைச்செம்மல் போன்ற இன்னோரன்ன விருதுகளைப் பெற்றவர். அவர் மேலும் ஆன்மீக சொற்பொழிவு மற்றும் பிரசங்கங்களில் ஈடுபட்டு வருகிறார்.

**வித்தகர் ஜே.டேவிட்.**

காரைதீவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆக விருந்து ஓய்வு பெற்ற ஜெ.டேவிட் சொறிக்கல்முனை கிராமத்தில் யுவான்பிள்ளை கிறகோரி, செபதேயு றோஸ்மேரி தம்பதியினரின் ஐந்தாவது பிள்ளையாக 24.10.1963 இல் பிறந்தார்.

றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியையும் கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் உயர்தரமும் கற்று போட்டிப்பரீட்சை

மூலம் 07.08.1988 இல் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1992.92 களில் யாழ். பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் விவசாய விசேட பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரியானதுடன் கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலையில் தமிழ்மொழியும் இலக்கியமும் முதுமாணிப்பட்டம் பெற்றார். தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் மெரிட் சித்தி பெற்றவர்.

ஆசிரியராகவும் கடமை நிறைவேற்று அதிபராகவும் தாம் பிறந்த மண்ணில் ஹொலிகுறொஸ் வித்தியாலயத்தில் அரும்பணிகளாற்றினார். தொடர்ந்து சம்மாந்துறை கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராக சுமார் பன்னிரெண்டு வரடங்களுக்கு மேல் அர்ப்பணிப்பான சேவைகளாற்றி பாடத்திலும் பாட இணைச்செயற்பாடுகளிலும் உயர்ந்த பெறுபேறுகளை கிடைக்க வழி செய்தார். தொடர்ந்து இலங்கை அதிபர் சேவைக்கான போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்று தரம் பெற்ற அதிபராகி கல்முனை பாண்டிருப்ப நாவலர் வித்தியாலயத்தை சுமார் எட்டு வருடங்கள் வழி நடத்தி பல சாதனைகளை ஏற்படுத்தினார். 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் கல்வியமைச்சினால் மிகச்சிறந்த அதிபருக்கான 'பிரதீப பிரபா' வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2019 இல் கோட்டக்கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று காரைதீவுக் கோட்டத்தை கல்வியிலும் பாட இணைச்செயற்பாடுகளிலும் உயர் நிலையடையச் செய்தார்.

கல்விப்புலத்தில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, கோட்டகல்விப்பணிப்பாளராக என பல நடிபங்குகளை ஏற்று முப்பத்தாறு வருடகாலம் உயர்ந்த சேவைகளையாற்றி

24.10.2023 உடன் ஓய்வு பெற்றார் .

ஜெ.டேவிட் அவர்கள் பன்முக ஆளுமை கொண்டவர்.

நாடறிந்த எழுத்தாளர். மேலும் சிறந்த பேச்சாளர்.

நடிகர், இசை வல்லுநர், நெறியாளர் கவிஞர்

எனப்பல ஆளுமை மிக்கவர்.

பைந்தமிழ்க்குமரன் எனும் புனை பெயரில் எழுதி

வரும் இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி 2015 ஆம் ஆண்டு கானல் வசந்தங்கள் எனும் பெயரில் வெளிவந்தது.

இந்நூலுக்கு 2016 இல் கொடகே சாகித்ய விருதும் கிடைத்தது. 2017 இல் மண்மாதா எனும் கவிதை நூலை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களது கனதியான அணிந்துரையுடன் வெளியிட்டார். இந்த வருடம் 2023 இல் கறையான் தின்ற கனவுகள் எனும் சிறுகதைத் தொகுதியையும் படைத்தார். மேலுமாக தாமே எழுதி நெறியாள்கை, ஒப்பனை, பின்னணி இசை வழங்கி மேடையேற்றிய 'அக்கினி

யாத்திரை' நாடகம் 2018 இல் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்று பல பரிசுகளை அள்ளி வந்தது. 2018.03.25 அன்று மலையக கல்வி கலாசார சங்கம் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் நினைவு விழாவில் தேசாபிமானி கல்வித்தீபம் விருது வழங்கி கௌரவித்தது.

யாகம், வேள்வி, விடியலும் சுடும், கோபுரங்கள் போன்ற இவரது நாடகங்கள் நாட்டின் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டு பெரும் பாராட்டுகளைப் பெற்றவையாகும். இவர்

விளையாட்டுத்துறையிலும் சளைத்தவரல்ல.

சாந்த குருஸ் விளையாட்டுக்கழக ஸ்தாபக உறுப்பினரான இவர் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் இணைந்து பயிற்சி பெற்று சிறந்த உதைபந்தாட்ட நடுவராகவும் உள்ளார். இத்தகைய சிறப்புகளுக்கு சொந்தக்காரர் நாளை வித்தகர் விருது பெறுகிறார்.

இருவரும் மேலும் இலக்கிய துறையில் மிளிர வாழ்த்துக்கள்.



காலைக்கதிர் Kalaikkathir

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மூச்சுத் திணறல் இருந்தது என்றும், தனக்கு அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை வெளியே எடுக்குமாறு அவர் மருத்துவர்களிடம் கோரியபோதும் அவர்கள் இயல்பான முறையில் குழந்தையை பெற்றெடுக்கவே அவரை வழிப்படுத்தினார்கள் என்றும் இறுதியில் தாயும் குழந்தையும் இறந்துவிட்டனர் என்றும் உறவினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் கவனயீனத்தாலேயே இந்த இறப்புக்கள் நிகழ்ந்தன என்பது அவர்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. தாயும் சேயும் உயிரிழந்த விடயத்தை நீண்ட நேரமாக உறவினர்களுக்கு சொல்லாமல் மறைத்து விட்டனனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமது மகளின் இறப்புக்கு உண்மையான காரணம் என்ன எனத் தெரிவிக்கும்வரை உயிரிழந்த பெண்ணின் உடலை பெற்றுக்கொள்ள போவதில்லை என உறவினர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் நியாயம் கேட்டு வைத்தியசாலையில் கூடியிருந்த போதிலும் வைத்தியசாலைப் பணிப்பாளரோ, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ சம்பவ இடத்திற்கு நீண்ட நேரமாக வருகை தரவில்லை எனவும் பணிப்பாளருடைய தொலைபேசி இயங்கவில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் பிரசவ விடுதியில் இவ்வருடத்தில் இடம்பெற்ற மூன்றாவது உயிரிழப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

தாயும் சேயும் உயிரிழந்துள்ளமை குறித்து மாகாண மற்றும் மத்திய சுகாதாரத் திணைக்களங்களுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இன்று விசாரணைகள் நடத்தப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.

## திக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் தலைவராக பொறுப்பேற்றது முதல் பல்வேறு ஆய்வுகளைச் செய்து வருகின்றேன். கடந்த காலங்களில் பனை வளம் சார்ந்த விடயங்களைப் பாதுகாப்பதில் பல்வேறு குறைபாடுகள் இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பனை உற்பத்திசார் தொழிலாளர்களுக்கு உயர்ந்த வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் சூழ்நிலையில் சபை இல்லை என்ற குற்றச்சாட்டும் நிலவுகின்றது.

திக்கம் வடிசாலை கடந்த பத்து வருடங்களாக முன்னாள் அமைச்சர் ஒருவரால் சூறையாடப்பட்டுள்ளது. அங்கு பணிபுரிந்த முன்னாள் களஞ்சியசாலை காப்பாளர் ஒருவர் எனக்கு இது தொடர்பில் முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளார். தான் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு தனது வேலையில் இருந்து விலக்கப்பட்டார் எனவும், இன்று வரை நீதி கிடைக்கவில்லை என்றும், தான் உயிரை மாய்க்கும் நிலைக்கு சென்றிருந்தார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் ஒருவரது அதிகாரப் பிடியில் பனை அபிவிருத்திச் சபை மட்டுமல்ல வடக்கு மாகாணமும் சிக்கி சீரழிந்து கொண்டிருந்த நிலையில், எனது நியமனத்தின் மூலம் தமக்கு நடந்த அநியாயங்களை வெளிக்கொண்டு வர பலர் துணிந்திருக்கிறார்கள்.

இலங்கையின் மிகப்பெரிய மது உற்பத்தி நிறுவனத்திடம் திக்கம் வடிசாலை கையளிக்கப்பட்டுள்ளது. பனஞ்சாராய உற்பத்தி ஒன்றும் அங்கு நடந்தது. ஆனால் இது பற்றிய எந்தத் தகவலும் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. நான் சபையை பொறுப்பெடுத்த பின்னரே அந்த ஒப்பந்தத்தின் பிரதி பனை அபிவிருத்திச் சபைக்கே கிடைத்தது. முதல் தகவல் அறிக்கையின் பிரகாரம் கிட்டத்தட்ட 100 மில்லியன் ரூபாய் நேரடியான பணப்பரிமாற்றம் அந்த இடத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்திருப்பதாக அறியமுடிகின்றது.

அதனைவிட 2014ஆம் ஆண்டு சபையின் அன்றைய முன்னாள் தலைவரின் அறிக்கையின்படி 69 மில்லியன் பெறுமதியான மதுசாரம் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அங்கு நடைபெற்ற கொள்ளைகள் முறைகேடுகள் மிக அதிகமானவை. இப்போது ஒவ்வொன்றாக வெளிவருகின்றது. சாட்சியங்களைச் சேகரித்து வருகின்றோம். இந்த விசாரணைகளில் இருந்து யாரும் தப்ப முடியாது.

இந்தத் தொழிலை மீளக் கட்டியெழுப்புவது சவாலானதொரு விடயமாக மாறியிருக்கிறது. வடிசாலைகள் தென் இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு குருநாகல் புத்தளம் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் தென்னங்கள்ளு இங்கு விற்பனை செய்யப்படுகின்றது. நெடுந்தீவுக்கும் தென்னங்கள்ளை விற்பனை செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பனைவளம் இருந்தும் அரசியல்வாதிகளின் ஊழல் நிறைந்த செயற்பாட்டால் இந்தத் தொழில் அழிந்து போயுள்ளது. நெடுந்தீவில் பிரதேச செயலாளர் ஒருவரால் சட்டவிரோதமாகக் கள் உற்பத்தி நிலையம் ஒன்று நடத்தப்பட்டு தென் இலங்கைக்கு பனங் கள் விற்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

பனை வளத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். பொதுமக்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இலங்கையில் 11 மாவட்டங்களில் பனைவளம் உள்ளது. அவற்றின் எண்ணிக்கை தொடர்பான முழுமையான கணக்கெடுப்பொன்றை செய்ய இருக்கிறோம். அதன் பின்னரே இனி அவற்றை வெட்டுவதற்கு அனுமதி வழங்குவதா என்ற விடயம் குறித்து ஆராயவுள்ளோம்.

பனை மீள் நடுகையின்போது நடந்த மோசடிகளால் நிதி அமைச்சு அதனை இடைநிறுத்தியிருக்கிறது. பனை அபிவிருத்திச்சபை தமது சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படாத காரணத்தால் ஆளும்தரப்பு அந்த செயற்பாட்டை இடைநிறுத்தியிருந்தது. அதனை மீள செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

பனஞ்சாராயத்தினை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகமான வருமானத்தைப் பெறமுடியும். அதற்கான அனுமதியை எமது சபையே வழங்கும். தனியாக எவரும் செய்யமுடியாது. ஒருசில ஊழல்வாதிகள் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் லஞ்ச மோசடியில் ஈடுபட்டு புதியவர்கள் இந்த தொழிலுக்கு வரவிடாமல் தடுத்துள்ளனர். அவ்வாறானஒரு விடயத்திற்காக 15 மில்லியன் பணம் வழங்கப்பட்டதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. விரைவில் நடவடிக்கை எடுக்க உள்ளோம். ஏற்றுமதியில் ஈடுபடுவதற்குப் பலர் விண்ணப்பித்துள்ளனர். அதற்கான கூட்டம் விரைவில் நடக்க உள்ளது என்றார்

## ரூ. 500....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பந்துல ஜயசிங்க, கணினி நிரலாளர் ரோஹித சமரவீர, வாகன ஒதுக்கீட்டுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுதுநர்களான உபுல் பிரியந்த, ஹேமந்த முத்துங்க, சன்ன ரோஹித, பிரியங்கனி சிறிமான்ன, வாகன இறக்குமதியாளர்களான டீ.பீ. எரியகம மற்றும் நலிந்த மகேஷ் குமார ஆகியோர் இந்த வழக்கில் சந்தேகநபர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2015ஆம் ஆண்டுக்குப் பின்னர், இறக்குமதிசெய்யப்பட்டு வரிசெலுத்தப்படாமல் இலங்கைக்குள் கடத்தப்பட்ட 200 சொகுசு கார்கள், 2005ஆம் ஆண்டுக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட சாதாரண கார்களாகக் காட்டப்பட்டு மோட்டார் போக்குவரத்துத் துறையின் கணினி அமைப்பில் பதிவேற்றப்பட்டுள்ளன என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவறான தகவல்களைப் பதித்து மேற்கொள்ளப்பட்ட இந்த மோசடிக்காக 8 அதிகாரிகளையும் குற்றவியல் சட்டங்களின் தண்டிக்கக்கூடிய வகையில் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் இந்த மோசடி அம்பலமானது. குறித்த வாகனங்களை பறிமுதல் செய்யுமாறு நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்ற இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, கடந்த வாரம் அவற்றில் இருபது வாகனங்களைக் கைப்பற்றி நீதிமன்றத்தில் முற்படுத்தியது. பின்னர், அவற்றைப் பறிமுதல் செய்வதற்காக சுங்கப் பிரிவினரிடம் கையளித்தது.

## தேர்தல்களிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிட மாட்டேன் என்று ரெலோ அமைப்பின் செயலாளர் ஜனா கருணாகரம் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டுப் படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். மட்டக்களப்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இனிவரும் தேர்தல்களில் நான் போட்டியிடும் சந்தர்ப்பம் எக்காரணம் கொண்டும் இருக்காது. கடந்த தேர்தலில் கூட நான் போட்டியிட மாட்டேன் என்றுதான் தெரிவித்திருந்தேன். ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட பிளவு, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தலைமை தாங்கும்படி பங்காளிக் கட்சிகள் வழங்கிய அழுத்தம் என்பன காரணமாகவே போட்டியிட்டேன்.

இனி வரும் காலங்களில் தேர்தல்களில் போட்டியிடமாட்டேன். அதற்காக அரசியலில் இருந்தும் ஒதுங்க மாட்டேன். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் தமிழ் மக்களுக்கும் சேவையாற்ற எப்போதும் தயாராக இருப்பேன்.

தேர்தல் தோல்விக்குப் பல காரணங்கள் உண்டு. அரசுத் தலைவர் தேர்தலில் பொதுக் கட்டமைப்பு சார்பில் சங்குச் சின்னத்தில் போட்டியிட்ட அரியநேத்திரன் பொதுத் தேர்தலில் சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்கவேண்டாம் என்று மும்முரமாகப் பரப்புரை செய்தார். இப்படிப் பல காரணங்கள் உண்டு - என்றார்.

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணிக்கு பொதுத் தேர்தலில் கிடைத்த இரு தேசியப் பட்டியல்களில் ஒன்றை ரவி கருணாநாயக்க சுருட்டிக்கொண்டது தொடர்பில் உரிய தீர்மானத்தை எடுப்பதற்காகவே ஐ.தே.க. செயற்குழுவைக் கூட்டுமாறு அவர் கோரியுள்ளார்.

கூட்டணித் தலைவர்களின் முறையான ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் இல்லாமல் ரவி கருணாநாயக்கவின் நியமனம் இடம்பெற்றுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ரவி கருணாநாயக்கவின் நடவடிக்கையானது கட்சியின் யாப்பைக் கடுமையாக மீறும் செயல் என்பதால், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவை விரைவில் கூட்டி இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ளுமாறும் லசந்த குணவர்தன தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

## புதிய செயலாளர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகளுக்கான புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று அரசுத் தலைவரின் அலுவலகத்தில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.



நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்களின் விவரங்கள் வருமாறு:

பிரதமரின் செயலாளர்: ஜி.பி.சபுதந்திரி

அமைச்சரவை செயலாளர்: டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்னாண்டோ

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு: மூத்த பேராசிரியர் கபில சி. கே. பெரேரா

















நிதி விவகாரங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு: கே. எம். திரு. எம்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## புதிய செயலாளர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)













சிறிவர்தன

தொழில்துறை மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சு: ஜே.எம். திலகா







ஜெயசுந்தர

புத்த சாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு: ஏ. எம். பி. எம். பி. அதபத்து

பெருந்தோட்டங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு: பி. கே. பிரபாத் சந்திரகீர்த்தி

பாதுகாப்பு அமைச்சு: எச்.எஸ்.எஸ்.துய்யகொண்டா

பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு: டி. டபிள்யூ. ஆர். திரு. பி செனவிரத்ன

நகர்ப்புற வளர்ச்சி, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சு: யு. ஜி. ரஞ்சித் ஆரியரத்ன

எரிசக்தி அமைச்சகம்: பேராசிரியர் கே.டி. எம்.உதயங்க ஹேமபால

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு: எஸ். அலோக பண்டார

தொழிலாளர் அமைச்சு: எஸ். எம். பியதிஸ்ஸ

வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சு: ஏ. விமலேந்திராராஜா

விவசாயம்,கால்நடைகள்,நிலங்கள்மற்றும் நீர்ப்பாசன அமைச்சு: டி. பி. விக்கிரமசிங்க

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு: கே. எம். ஜி. எஸ். என் கலுவேவா

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு: ஏ. எச். எம். யு. அருண பண்டார

அயலுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு: அருணி ரணராஜா ஆகியோருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.




காலைக்கதிர் Kalaikkathir

# கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராகச் சுஜாதா





(சகாதேவராஜா)

மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளரும், கிழக்கு மாகாண பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளருமான திருமதி சுஜாதா குலேந்திரகுமார் இலங்கை கல்வி நிர்வாக சேவை விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அவர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு, நேற்று (செவ்வாய்க்கிழமை) தமது கடமையை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனால் மட்டக்களப்பு வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடமும், கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடமும் ஏற்பட்டுள்ளது.

# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்



(அபு அலா)

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த விவசாயக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இம்முறை மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவுரைக்கிணங்க விவசாயஅபிவிருத்திகுழுக்கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள்,விவசாயிகளின்களநிலை பிரச்சினைகள் மற்றும் கருத்துக்கள் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகள் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தக்கூட்டத்தில்மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.சுப்ரமணியம், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் வைத்தியர் ரி.கருணைநாதன் உள்ளிட்ட பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தொடருந்து மிதிபலகையில் பயணித்த இளைஞன் கம்பத்தில் மோதிச் இறப்பு

பொல்கஹவலயில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த ரயிலின் மிதி பலகையில் பயணித்த இளைஞன் ஒருவர் ரயில் மார்க்கத்தில் உள்ள சமிக்ஞை கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார் என கிரிபத்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கணேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஆவார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கனேடியத் தமிழ் காங்கிரஸ் போன்றவை பிரிவினைவாதத்தை முன்வைக்கின்றன

## விமல்வீரவன்ஸ குற்றச்சாட்டு

கனேடிய தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் இனவாத மத பிரிவினைவாத கோரிக்கைகளை முன்வைக்கின்றன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

வடக்கில் தேசியமக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகள் இனவாதத்திற்கு எதிரானவை மாத்திரமல்ல பிரிவினைவாதத்திற்கும் எதிரானவை என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாத ஆதரவு தமிழ்தேசியகூட்டமைப்பு போன்றவற்றை தெரிவுசெய்வதற்கு பதில் தமிழ் மக்கள் ஜேவிபியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியை தெரிவுசெய்துள்ளனர். இதன் மூலம் பிரிவினைவாதம் இனவாதத்தை நிராகரித்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே கனடா தமிழ் அமைப்புகளின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுவதற்கு பதில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களின் அபிலாசைகளை சமமாக நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் ஆணை என விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

# காலியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றிச் சாவு

காலி, எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவதகல பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமடைந்த நபரொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் எல்பிட்டிய, நவதகல பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

எல்பிட்டிய, நவதகல பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு சென்ற சந்தேக நபரொருவர் விற்பனை நிலையத்தின் உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்தவர் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நவதகல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தெஹிவளை துப்பாக்கி சூடு தொடர்பில் இருவர் கைது

தெஹிவளை நெதிமால பிரதேசத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி நபர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதான துப்பாக்கித் தாரி உட்பட இருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதாக மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளது.

கொலை செய்யப்பட்டவர் தெஹிவளையில் பிரதேசத்தைச் சேர்ந்த அனுர கோஸ்தா என்பவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

போதைப்பொருள் கடத்தல் காரர்களும் பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவர்களுமான படோவிட்ட கொஸ் மல்லி மற்றும் படோவிட்ட அசங்க ஆகிய இருவருக்கு இடையில் ஏற்பட்ட போதைப்பொருள் தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் , பாதுக்க பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய நபரும் அத்துருகிரிய பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய நபரும் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், துப்பாக்கி மற்றும் 8 தோட்டாக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்பு பிரிவினர் முற்கொண்டு வருகின்றனர்.

# அ'புரத்தில் மத வழிப்பாட்டுத் தலங்களில் போலியாக யாசகம் கேட்பவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை

## 6 பேர் கைது

அநுராதபுரத்தில் மத வழிப்பாட்டுத் தலங்களுக்கு வருகை தரும் யாத்ரீகர்களிடம் மருத்துவ உதவி போன்ற பல்வேறு காரணங்களை கூறி போலியாக யாசகம் பெற்ற ஆறு பெண்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பல முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து ஜய ஸ்ரீமஹா போதி மற்றும் ருவன்வெலிசாய ஆகிய மத வழிப்பாட்டுத் தலங்களில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் யாத்ரீகர்களைப் பின்தொடர்ந்து சென்ற இந்த ஆறு பெண்கள் உடமலுவ பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்கள் கண் சத்திரசிகிச்சை, சிறுநீரக நோய்களுக்கான சிகிச்சை மற்றும் இந்தியாவிற்கு புனித யாத்திரை செல்வது போன்ற காரணங்களைகூறி யாசகம் பெற்றுள்ளதாக உடமலுவ பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி பொலிஸ் தலைமைப் பரிசோதகர் டபிள்யூ.சி.எல்.ஆர்.பி.கே. வெத்தேவ தெரிவித்துள்ளார்.

இவர்கள் பணம் வழங்கும் வரை தங்களை தொந்தரவு செய்வதாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு யாத்ரீகர்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்கள் 51 முதல் 80 வயதுக்கு இடைப்பட்ட தேவநம்பிதிஸ்ஸ புர, பதுலகம, வெஸ்ஸகிரிய, திசாவெள, ஜயந்தி மாவத்தை மற்றும் கோரகஹவெள ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்களை மேலதிக நடவடிக்கைகளுக்காக உடமலுவ பொலிஸார் அநுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நகர அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் கடமைகளை பொறுப்பேற்றார்





புதிய அமைச்சரவையின் நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட கலாநிதி அனுர கருணாதிலக நேற்று (செவ்வாய்க்கிழமை) பத்தரமுல்ல, செத்சிறிபாயவில் அமைந்துள்ள அமைச்சின் அலுவிலகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து மற்றும் அமைச்சின் ஏனைய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அமைச்சின் ஊழியர்களது பங்களிப்புடன் எளிதாக இடம்பெற்றது.

அமைச்சர் கலாநிதி அனுர கருணாதிலக களனிப் பல்கலைக்கழக்கத்தின் கணிதப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றி இருக்கிறார். இவர் எண் பகுப்பாய்வு, கணித மாதிரியியல், கணினி கணிதவியல், பொறியியல் விஞ்ஞாபனம்ஆகியதுறைகளில்நிபுணத்துவம்உள்ள ஓர் ஆசிரியராக பல்கலைக்கழக சமூகத்திற்குள்ளே பிரபல்யமாக இருக்கின்றார்.

# பல்வேறு திருட்டு சந்தேகநபர் கைது

பல்வேறுதிருட்டுசம்பவங்களுடன்தொடர்புடைய இளைஞன் ஒருவன் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துருகிரிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாலசிங்ககொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஹோகந்தர பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபர் பாதுக்க பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடியுள்ளார் எனவும் மாலம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் விற்பனை நிலையம் ஒன்றில் திருடியுள்ளார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அத்துருகிரியபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

# காலியில் மின்னல் தாக்கி இளைஞன் உயிரிழப்பு

காலி, எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மத்தேவில பிரதேசத்தில் திங்கட்கிழமை மாலை மின்னல் தாக்கி இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் காலி, மத்தேவில பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஆவார்.

இந்த இளைஞன் திங்கட்கிழமை மாலை கறுவாத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது மின்னல் தாக்கி காயமடைந்துள்ள நிலையில் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் எல்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2024இல் வெளியிடப்பெற்றது